1982 மார்ச் 20]

திரு. ந. சிவஞானம் : துணைத் தலைவரவர்களே, "தமிழகத்திலுள்ள சிறைகளில் நவீன வசதியுடன் உள்ள கழிவு இடங்களை கட்டுவது பற்றி விவாதிக்க". நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,47,66,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவரவர்களே, "சிறைகளில் உள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் பத்தாண்டுகள் தண்டனை அனுபவித்தவர்களை பரிசீலனை செய்து விடுதலை செய்ய தமிழக அரசு ஒரு திட்டம் வரையறுத்து வைக்காமலிருப்பது பற்றியும், நீதிபதி இஸ்மாயில் கமிஷன் செய்துள்ள சிபாரிசுகளை அமுல் நடத்தாமலிருப்பது பற்றியும் விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

"மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,47,66,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, "பெரியார் மாவட்டத்தில் புதிதாக விரிவுபடுத்தும் கிளை சிறைச்சாலைகளில் காற்றோட்ட வசதிக்காக ஜன்னல் வைக்கக் கோரி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,47,66,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(இ) கோரிக்கை எண். 23— கூட்டுறவு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,72,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".